தமிழ்மொழி

ஆண்டு 3 : 2.6.2 கலை தொடர்பான உரைநடை பகுதியை வாசித்து கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

**கருத்துணர் கேள்விகளுக்கான சரியான விடையைத் தெரிவு செய்க.**



**வில்லுப்பாட்டு**

பாரம்பரிய கலைகளில் வில்லுப்பாட்டு என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கலையாகும். இக்கலையானது பல நூற்றாண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்திலிருந்தே புகழ்பெற்று விளங்குகின்றது. சிற்றூர்களில் அமைந்துள்ள கோவில்களில் இக்கலை சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது. தெய்வங்களின் வரலாறுகள், மாவீரர்களின் வரலாறுகள் போன்றவற்றை மக்களிடம் எடுத்துரைக்க வில்லுப்பாட்டுப் பெரிதும் பயன்படுகின்றது.

வில்லை முதன்மைக் கருவியாகவும் உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகியவற்றைத் துணைக் கருவிகளாகவும் கொண்டு வில்லுப்பாட்டு நடத்தப்படுவது வழக்கமாகும். வில்லுப்பாட்டின் முதல்வராக அமர்ந்து கதையைப் பாடுபவர் புலவர் என அழைக்கப்படுவார். இவர் கதை கூறுவது மட்டுமன்றி, பாடுவது, நடிப்பது, சூழலுக்கு ஏற்ப நகைச்சுவைத் துணுக்குகளைக் கூறுவது போன்றவற்றிலும் வல்லவராகவே இருப்பார்.

**1. எவற்றை எடுத்துரைக்க வில்லுப்பாட்டு பயன்படுகிறது ?**

________________________________________

**2. இக்கலையின் துணைகருவிகள் யாவை ?**

________________________________________

**3. வில்லுப்பாட்டு முதல்வரின் சிறப்புகள் யாவை ?**

________________________________________

**4. பாரம்பரிய கலைகளை மக்கள் அறிந்துகொள்ள என்னென்ன நடவடிக்கைகளைச் செய்யலாம்?**

________________________________________

**உடுக்கு, குடம், தாளம், கட்டை**

**தெய்வங்களின் வரலாறுகள், மாவீரர்களின் வரலாறுகள்**

**கதை கூறுதல், பாடுதல், நடித்தல், நகைச்சுவை துணுக்குகளைக் கூறுவதில் வல்லவர்.**

**வகுப்புகள் நடத்தலாம், நிகழ்ச்சிகளில் படைக்கலாம், தொலைக்கட்சிகளில் ஒளிபரப்பலாம்.**